1

படிப்பு என்பது வேறு; அறிவு என்பது வேறு!



ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது கணக்கு. ஒன்றும் ஒன்றும் ஒன்று என்பது கெமிஸ்ட்ரி. இரண்டுக்கும் வித்தியாசம் புரிந்து கொள்வது அறிவு.

படித்தவனுக்கும் அறிவு இருக்கும்; படிக்க முடியாத பல பேருக்கும் அறிவு இருக்கும். ஆனால் படிப்பு என்பதையும், அறிவு என்பதையும் ஒப்பிட்டுப் பேசுவது நல்லது அல்ல.

பதவியில் இருப்பவர்கள் எல்லாம் படித்தவர்களும் அல்ல. அறிவு ஜீவிகளும் அல்ல. அவர்களுக்கு கிடைத்த வாய்ப்பு. அதைப் பக்கத்தில் உள்ள படித்த அல்லது அறிவு உள்ள மனிதனால் தக்கவைத்துக் கொள்கிறார்கள். அதற்கான அறிவு இருந்தால், என்பதே உள்ளங்கை கூழாங்கல்.

படிப்பு இல்லை அறிவு இருந்தது :

படிப்பே இல்லாத, கைரேகை மட்டுமே வைக்கத் தெரிந்த, தொழில் தெரிந்த பெரியவர். ஒரு நான்கு சக்கர வாகனத்தை அக்கு வேறு, ஆணி வேறாகப் பிரித்தாலும், பின்பு அப்படியே புதியது போல், பூட்டி செய்து காட்டக்

கூடிய திறமைசாலி. அந்தத் திறமைக்கும் புரிந்து கொள்ளும் அறிவு வேண்டும்தான். அவரிடம் பல படித்தவர்கள் வேலை செய்கிறார்கள். வங்கிக்கணக்கு அவரது கைரேகை மூலம்தான் நிர்வகிக்கப்படுகிறது (இது 1990ம் ஆண்டு நிகழ்வு). இருக்கும் பணத்தை மனக்கணக்கு மூலம் சொல்லி விடும் ஆற்றல் அவருக்குள் உண்டு. அவ்வளவு சொத்து சேர்த்தபின், படித்த மகன்கள் கையில் பொறுப்பை ஒப்படைத்தார். அவர்களால், அவர் மாதிரி வேலை பார்க்கவும் முடியாது. வேலை வாங்கவும் தெரியாது. ஆனால் அப்பா சம்பாத்தியத்தை மட்டும் காப்பாற்றினார்கள். அதற்கு அவர்கள் படிப்பு உதவியது.

அரசியல் ஆக இருந்தாலும் சரி, தொழில்துறை ஆக இருந்தாலும் சரி, படிப்பைக் காட்டிலும் அறிவே முக்கியம் என்பதற்கு வரலாறுகள் சாட்சி ஆக இருக்கிறது.

சாதாரண குடும்பத்தில் பிறந்து இருந்தாலும், தன் தன்னம்பிக்கையால், அறிவைப் பட்டைதீட்டிக் கொண்டு, வைரமாக பிரகாசித்தவர்கள் பலர் உண்டு.

துபாய் நாட்டில் பெட்ரோல் பங்கில் வேலை செய்த சிறுவன், சாணத்திற்கு அங்கிருக்கும் மதிப்பைத் தெரிந்து வந்து, இந்தியாவில் இருந்து சாணம் ஏற்றுமதி செய்து பணம் குவித்ததும், பிள்ளைகளைப் படிக்க வைத்ததும், பிள்ளைகள் படிப்பும், அறிவும் கொண்டு, அரசியலை அரவணைத்து, சதுரங்கம் ஆடி, இந்தியத் தொழில் மன்னர்கள் ஆனதும், சரித்திரம்தான். அதில் ஒருவர் தோற்றதும், ஒருவர் கொடி கட்டியதும் எப்படி? அறிவா? படிப்பா? விதிப்பயனா? விதிப் பலனா?

பரம்பரை பணத்தால் பகட்டாக வாழலாம். அவர்களுக்கு படிப்போ அல்லது அறிவோ இருந்தால்தான், அந்தப்

பணத்தை பெருக்க முடியாவிட்டாலும், சுருக்காமல் காக்க முடியும் என்பதும் நிதர்சனம்.

படிப்பில் தோல்வி; அறிவால் வெற்றி

படிப்பில் தோல்வி கண்டாலும், அறிவால் வாழ்வில் பெயர் பெற்றவர்கள் அநேகம். கணித மேதை, கணிதத் தேர்வில் தோற்றவர். யார் தெரியுமா? $E = Mc^2$ என்ற கணித சூத்திரத்தைக் கண்டுபிடித்த கணித மேதை ஐன்ஸ்டீன். தொடக்கக் கல்வியில் கணிதப் பாடத்தில் சரியான மதிப்பெண் பெறாமல், லாயக்கில்லை என்று வகுப்பில் இருந்து துரத்தப் பட்டவர். படிப்பில் ஜெயிக்கவில்லை என்றாலும், அறிவால் ஜெயித்தவர்.

மதிப்பெண் கல்விக்கு இன்று வேலைவாய்ப்பில் வேண்டுமானால் மதிப்பு இருக்கலாம். பட்டம் பெற்ற கல்வியினால் பணம் வேண்டுமானால் சம்பாதிக்கலாம். ஆனால் தொடர்ந்து நிலைக்க முடியுமா என்பது கேள்விக்குறியே. அதை ஆச்சரியக்குறியாக மாற்ற மனிதத்தை - அறிவை - சம்பாதிக்க வேண்டும். அந்த அறிவு வளர கற்க வேண்டும்; செயல் சிறப்புடன் செய்ய கற்க வேண்டும்; கூடி வாழக் கற்க வேண்டும்; தனித்த ஆளுமையுடன் செயல்படக் கற்க வேண்டும்; இந்த நான்கும்தான் கல்வியின் தூண்கள் என்று சொல்கிறது யுனெஸ்கோ.

வாலறிவன் நற்றாள் தொழாத கல்வியினால் பயன் என்ன என்றான் ஒரு அறிவு ஜீவி. அதனால் அறிவு பட்டை தீட்டப்பெற வேண்டும் என்பதே உண்மையின் வெளிப்பாடு.

அறிவு அதிகம். ஆனால் நடந்த பாதை வேறு

பயங்கர மூளை என்று சொன்னார்கள். அவர் படைத்த கருத்துக்கள் மிகப்பயனுள்ளவை என்றும் சொன்னார்கள்.

படிக்காவிட்டாலும் அறிவு ஜோதி ஒளிர்கிறது என்றும், தனது மூளையின் எடை அதிகம் என்றும், அவரே தம்பட்டம் அடித்ததையும் பார்த்தோம். கடைசியில் பாவ காரியங்கள் செய்தவை வெளிப்பட்டு, காராக்கிருகம் அடைந்த நிலை. அதனால் அறிவையும் நல்லவிதம் உபயோகிக்க வேண்டும்.

அடுத்த வீட்டு வாழைமரம் காம்பவுண்டு சுவர் தாண்டி குலை தள்ளியதால் வாழைப்பூவைப் பறித்துக் கொண்டவன் படித்தவனா? அறிவாளியா? ஒழுக்கக்கேடு உள்ளவன். அதே மாதிரி தன் வீட்டுக் கோழிக் கும்பலை அடுத்த வீட்டுத் தோட்டத்தை நாசம் செய்ய வைத்தவன் படித்தவனா? அறிவாளியா? ஒழுக்கக்கேடு உள்ளவன். சாமான்யனை விட கேடு கெட்டவன்.


ஒரு பெண் ஒரு வங்கியில் படிப்படியாய் உயர்வு. நல்ல படிப்பு. உலக நாடுகள் சுற்றி, வங்கியை வளர்த்தார். தன் கணவர் தொழிலுக்கு, தவறான வழியில் வங்கிப் பணத்தைப் பயன்படுத்தியது பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் வெளிச்சத்துக்கு வந்தது. அறிவும், படிப்பும் இருந்தும், செயலில் தெளிவும், நேர்மையும் இல்லை என்றால், சத்தியம் ஒருநாள் ஜெயிக்கும் என்பதை அவர் அறிவு புலப்படுத்தவில்லையே. அவரைப் பதப்படுத்தவில்லையே என்பதே ஆதங்கம்.

வெற்றி நிச்சயம் :

படித்தவர்களின் வெற்றியும் சரி, அறிவு ஜீவிகளின் வெற்றியும் சரி, நேரான, நேர்மையான வழியில் செயல்பட்டால் தான் நிலைக்கும் என்பதே அன்றுமுதல் இன்றுவரை சரித்திரம் காட்டும் சரித்திரம்.

2

நேசிக்க, வாசிக்க, சுவாசிக்க...



நாடக எழுத்து மன்னன், எல்லா நாடுகளும் புகழ்ந்த, புகழும் ஷேக்ஸ்பியர் பிறந்த நாள் ஏப்ரல் 23. புத்தகத் திருநாள்.

எழுத்தாளன் இருக்கும் பொழுது, புகழ் பெறுவது அபூர்வம். செத்தபின்தான் சிலை வைப்பார்கள். பேச்சாளன் நிலை வித்தியாசம். வாழும் பொழுதே வசதி வரும்.

பேச்சும், எழுத்தும் ஒருவரிடமே இணைவது மெத்த அபூர்வம். அது இறைவன் கொடை. சுகி சிவம் அவர்கள் நினைவுக்கு வருகிறார்.

எந்த மாதிரி புத்தகம் நேசிக்க, வாசிக்க, சுவாசிக்கத் தேவை?

கம்பனும் வள்ளுவனும் காலத்தால் நிலைத்தார்கள். இவை கவிதை இலக்கியம்.

கந்தசஷ்டி கவசம், பெரியபுராணம் என்றைக்கும் வாழும். இவை பக்தி இலக்கியம்.

புரட்சித் தீபம் பாரதியும், புதுமைப் புயல் கண்ணதாசனும் பல்துறை இலக்கியம் படைத்தவர்கள்.

காண்டேகரும், தி.ஜ.ர.வும் எழுதியவை வாழும் படைப்புக்கள்.

மு.வ.வும் முல்லை முத்தையாவும் சாகாவரம் பெற்ற படைப்பாளிகள்.

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஏன் படிக்க வேண்டும்?

நவீன உலகில் இணையம் கோலோச்சுகிறது. அது எப்பொழுதும், எல்லாருக்கும், எல்லா விதத்திலும் உதவுமா? நிச்சயமாக காலம் காட்டப் போகும் கணக்கு இது.

தரங்கம்பாடியிலும், கொச்சியிலும் ஐரோப்பியர்கள் துவக்கிய அச்சுக்கலைப் புத்தகங்கள் எத்தனை காலம் ஆனாலும் வாழும் என்பது உண்மை.

ஓலைச்சுவடிப் புத்தகங்கள் (பனை ஓலை) கால மாற்றத்தால் அச்சுக்கலைப் புத்தகங்கள் ஆகின.

பூச்சிகள் விரும்பி அரித்தால் (படித்தால்) சில புத்தகங்கள் காணாமல் போய்விடலாம். அதைப் பாதுகாப்பது முக்கியம்.

இணைய வழிப் புத்தகங்களைப் பாதுகாப்பதும் அதி முக்கியம் என்பதும் அறிந்த சேதிதான்.

எந்தப் புத்தகம் என்றாலும் நல்லவைகளைத் தேடிப் பிடித்துப் படித்தால் நமக்கும் நல்லது. அதன்படி நடந்தால் நாட்டுக்கும் நல்லது.

புத்தகங்களைப் பரிசு கொடுங்கள் என்று ஏன் பல கட்சித் தலைவர்கள் சொல்கிறார்கள்? அதை மட்டும் சொல்லிய வண்ணம் கடைப்பிடிக்கிறார்கள்? புத்தகங்கள்

கொடுத்த புத்தறிவால் மக்களை முன்பு ஈர்த்த காரணத்தால் தான்.

பின்பு ஈர்த்தது வேறு என்றாலும் ஆட்சி அமைக்க, ஆட்சி மாற்ற உதவியவை என்றாலும், ஆணிவேர் ஆக்கியது புத்தகங்களும் எழுத்தும்தான் என்பது மறக்க, மறுக்க, மறைக்க முடியாத உண்மைதானே!

பொறுமை - பெரிய தவம்

திருப்தி - பெரிய இன்பம்

இரக்கம் - பெரிய அறம்

மன்னித்தல் - பெரிய ஆயுதம்

இந்த மாதிரி சிந்தனைக் கோர்வைகள் சிறிதளவு கற்றாலும், உணர்ந்தாலும், செயல்படுத்தினாலும் வாழ்க்கைப் பாதை மாறும். வாழ்க்கைப் பாதையை மாற்றும்.

அர்த்த சாஸ்திரம் படைத்த சாணக்கியனின் அந்தக் கால ஓலைச்சுவடி எழுத்துக்கள் இன்றைக்கும் உண்மையைத் தானே சொல்கின்றன.

அதிர்ஷ்டசாலி என்பவன் யார்?

1. வயதான காலத்திலும் அன்புள்ள துணைவியுடன் வாழ்பவர்.
2. உறவை, நட்பை நம்பி உழைத்துச் சேர்த்த பணத்தை நம்பிக் கொடுக்காமல் வாழ்வது.
3. அடுத்தவேளை உணவுக்காக அடுத்தவரை எதிர்பார்க் காமல் இருப்பது.

எத்தனை ஆண்டுகாலத்துக்குப் பின்னும் இது எத்தனை ஜீவிதம். அந்த எழுத்தைப் படிப்பதும், அதைப் பாதுகாப்பதும், செயல்படுத்துவதும்தான் காரணம்.

உலக புத்தக தினத்தின் முக்கிய புள்ளிகள். எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் மட்டுமல்ல, அதைத் தேடிப்படிக்கும் வாசகர்களும்தான்.

வெறும் 47 பக்கங்கள் உள்ள நூல் அமெரிக்காவை இங்கிலாந்தின் பிடியில் இருந்து மீட்டது செய்தி அல்ல. வரலாறு! எழுத்தின் சக்தி எப்படி என்பதை உணர வேண்டும்.

சமீபத்தில் நடந்த சென்னை புத்தக கண்காட்சியில் 20 நாட்கள், 800 புத்தகக் கடைகள், 15 லட்சம் மக்கள் வருகை, 15 கோடி வணிகம் என்பது நெஞ்சு நிறைந்த பாராட்டுக்கு உரியது அல்ல.

300 கோடி முதலீட்டில் எடுத்த பொழுதைத் தின்னும் படம், 800 கோடி திரட்டித் தருகின்றது என்பதைப் பார்க்கும் பொழுது, அறிவை வளர்க்கும் புத்தகங்களின் விற்பனை அளவு தூசிதான்.

96 பக்கம் உள்ள நூல் 1000 புத்தகம் அச்சிட, ராயல்டி சேர்த்தால் என்ன அடக்க விலை ஆகும்? விற்பனைக் கழிவு என்ன ஆகும்? எழுத்தாளனுக்குக் கிடைப்பது என்ன? பதிப்பாளனுக்குக் கிடைப்பது என்ன?

அரசியல்வாதிகள் தொடர்பு இருக்கும் பதிப்பகத்தார் ஜெயிப்பதைப் பார்க்கிறோம்.

சில வெகுஜன பத்திரிகைகள் தரும் வெகுமதி போல பல பத்திரிகைகள் கொடுப்பதில்லை எழுத்தாளனுக்கு! காரணம் மனமா? வருமானமா?

நல்ல எழுத்துக்கள் எப்பொழுது ஜீவிக்கும்? எழுத்தாளன் ஜீவன் பிரிந்த பிறகு என்பது நடைமுறை உண்மை.

புத்தகத்தை இரவல் கொடுக்காதீர்கள். விலை கொடுத்து வாங்கிப் படிக்கச் சொல்லுங்கள். இதனால் எழுத்தாளன் மனசும், வயிறும் நிறையும்.

கோயில்களில் நூலகங்கள் திறக்கச் சொல்லுங்கள். ஆன்மிகம் சிறக்கும். செழிக்கும்.

"**எனது நூலகம்தான் எனது செல்வம்**" என்று சொன்ன புத்தகத் தந்தையின் வாசகங்களை திரும்பப் படிப்போம்.

எங்கள் குடும்பத்தின் சார்பாக எழுப்பிக் கொண்டிருக்கும் தனநல தன்வந்திரி கோயில் முழுமை அடைந்ததும் (கூழி பிறை - 622 402) அங்கு ஒரு நூலகம் துவக்கப்பட உள்ளது.



3

புத்தகத் திருநாள் - புத்தாக்கம் தருநாள்!

அறிவு

படிப்பு என்பது அறிவை வளர்க்க, கல்வி என்பது அறிவின் ஊற்றுக் கண்ணைத் திறப்பதற்காக அமைய வேண்டும். தோண்டத் தோண்ட மணற்கேணி தண்ணீரைத் தருவது போல (அதாவது மணலைச் சுரண்டிய வியாபாரத்திற்கு இடம் அளிக்காத இடங்களில் மட்டும்தான்) படிக்கப் படிக்க அறிவு விருத்தியாகும். அத்துடன் ஜீவித்தும் இருக்கும்.

மனனம் செய்வதும் மதிப்பெண் பெறுவதும்தான் மட்டும் இன்றைய கல்வி என ஆகிவிட்டது. இது வியாபார மற்றும் வருவாய்க்கான கல்வி, அறிவு என்பது வேறு. அதற்கான படிப்பு என்பதும் வேறு. இந்த அறிவு பட்டை தீட்டப்படும் பொழுதுதான் நல்ல விஞ்ஞானிகள், இலக்கியவாதிகள், சமுதாய சீர்திருத்த சிந்தனையாளர்கள் பிறப்பெடுக்கிறார்கள்.

புத்தகங்கள்

அறிவு வளர புத்தகங்கள் - அது அச்சிட்ட புத்தகங்கள் ஆக இருக்கட்டும், காலமாற்றத்தால் கைக்குள் அடங்கும்

விஞ்ஞானக் கருவிகள் ஆக இருக்கட்டும், எதுவானாலும் கற்க - படிக்க உதவ வேண்டும்.

புத்தகங்கள் என்பது இலக்கணம், இலக்கியம் என்ற இரு பெரும் பிரிவுகளுக்குள் அடங்கினாலும் அவை சமுத்திரம் மாதிரி. சரித்திரம், விஞ்ஞானம், அரசியல், ஆன்மிகம் இப்படிப் பலவாறாக விரியும்.

படைப்புத் திறன் என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி. படிக்கும் ரசனையும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி. படிப்பாளிகளை வைத்து படைப்பாளிகள் உருவாகிறார்களா, இல்லை படைப்பாளிகளை வைத்து படிப்பாளிகள் வளர்கிறார்களா என்பது முட்டை முந்தியா, கோழி முந்தியா என்ற கதைதான்.

காலமாற்றம்

முந்தைய காலகட்டத்தில் கண்ணால் பார்த்தார்கள், வாசித்தார்கள். இன்று கண்ணால் பார்த்து காதால் வாசிக்கிறார்கள். விஞ்ஞான வளர்ச்சியின் பரிணாமங்களில் வந்த வாசிப்புத்திறன் இது. இப்போது வித்தியாசமாக இருப்பது காலத்தின் கட்டாயம்.

கொலம்பஸின் தேடுதல் அன்று புதுமை. நாஸாவின் தேடுதல் இன்று புதுமை. நாளை...? எல்லாம் நன்மைக்கே.

குத்துப் பாட்டுக்கு இன்று இருக்கும் மதிப்பு பத்துப் பாட்டிற்கு இல்லை என்பது காலமாற்றம். அதனால் குத்துப்பாட்டிலேயே பத்துப்பாட்டை காலத்திற்கு ஏற்ப மாற்றிப் புகட்டினால் நல்லது. புதுமைகளுக்கு வரவேற்பு குறையாதே!

காலமாற்றங்கள் தவிர்க்க முடியாததே. அது போலத்தான் கருத்து மாற்றங்களும்!

பத்திரிகைகளின் பாணி

மணிக்கொடி, கணையாழி, எழுத்து, சரஸ்வதி, தென்றல் என்று காலத்தை வென்று, இன்றும் பேசப்படுகின்ற பத்திரிகைகள் உண்டு. அதுபோல இன்றைய பத்திரிகைகளின் பாணி நாளை புகழப்படக் கூடும்.

புதுமைப்பித்தன், குபரா, தொ.மு.சி., திகசி, தி. ஜானகிராமன், வல்லிக்கண்ணன், பாரதியார், பாரதிதாசன், சுரதா, மு.வ, டி.கே.சி, ரா.பி. சேதுப்பிள்ளை, கல்கி, தீபம் நா.பா., ஜெயகாந்தன், கண்ணதாசன், லட்சுமி, வாஸந்தி, சிவசங்கரி என்ற வரிசை தொடரத் தொடர புத்தகத் திருநாளும் தொடரும்.

காண்டேகர் நாவல்கள் (மொழி மாற்று) இன்றும் மார்க்கண்டேயத் தன்மை கொண்டுள்ளன. காரணம், காஸ்ரீஸ்ரீயின் மொழிபெயர்ப்புத்திறன்.

வளர்ச்சிதான்

பத்து பக்க எழுத்துக்கள் ஒருபக்கமாகச் சுருங்கியது வேக உலகத்தின் வீச்சு.

வாசித்த புத்தகங்களை அடுக்கி அழகு பார்ப்பதைவிட, அடுத்தவர்க்கும் கொடுத்து படிப்புத் திறனை வளர்க்க வேண்டும்.

இணையங்களின் வளர்ச்சியால் அச்சுப் புத்தகங்கள் படிப்பவர் எண்ணிக்கை குறைந்துவிட்டது என்று கூறமுடியாது. மக்கள்தொகைக்கு ஏற்ப சராசரி வளர்ச்சியில்தான் உள்ளது.

உதாரணமாக அன்று ஒரு நிறுவனத்தில் இருந்து மாத, வார, பத்திரிகைகள் இரண்டு வந்தன என்றால் இன்று ஒன்பது பத்து என வரத் துவங்கி விட்டன. அதுபோல பல படை எடுத்து வாசகர் உலகில் வலம் வரத்தான் செய்கின்றன. வியாபார உத்தி என்றாலும் இதில் மகளிர், அரசியல், பரபரப்பு, விவசாயம், மருத்துவம், வாகனம், ஆன்மிகம் என பலதுறைச் சேதிகளுக்கும் தனித்தனிப் பத்திரிகை என்று வாசகர் வட்டத்தை அதிகரிக்கத்தானே செய்துள்ளது.

அதுபோல பதிப்பகங்களும். வருமானம் சிலருக்குத்தான் என்றாலும் பெருகிவிட்டன. நூலகங்களை நம்பி, எழுத்துக்குப் பரிசு தரும் இலக்கிய ஆர்வலர்களை நம்பித்தான் பதிப்பகங்கள் உயிர்ப்புடன் உள்ளன. இதைவிட ஆத்ம திருப்திக்காக புத்தகங்கள் தரும் பதிப்பகங்களும் உள்ளன. இது இன்னும் பெருகி, வீட்டுக்கு ஒரு நூலகம் என அமைய வேண்டும்.

வேகப்படிப்பு என்பது வீண்படிப்புத்தான். வரிக்கு வரி உள்வாங்கி, ஜீரணித்து, சிந்தித்துப் படித்தால்தான் வாசிப்பில் ஜீவன் இருக்கும்.

4


தோற்கவே விரும்பினான் கர்ணன்



எந்த ஒரு வீரனும் குருவின் சொல்லை மீற மாட்டான். அதே சமயம் எந்தப் போட்டியிலும் வெற்றி பெற வேண்டும் என்றுதான் விரும்புவான்.

வில்வித்தையில் சிறந்தவன் அர்ச்சுனன். ஒரு மாங்காயை கொய்த கதை எல்லாருக்குமே தெரியும். மற்றவர்கள் எல்லாம் மாங்காயைக் குறி வைத்துத் தோற்றபோது, அர்ச்சுனன் மாங்காயின் காம்பைக் குறி வைத்து வீழ்த்தினான் என்பதால் குறி எப்படிப் பார்க்க வேண்டும் என்பதை நிதர்சன உண்மை ஆக்கினான்.

கர்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் ஒரே குரு, துரோணாச் சாரியார்தான். இன்னொரு குரு கிருபாச்சாரியார்.



ஒரு விடிகாலை பயிற்சிக்காக அர்ச்சுனன், கர்ணன் முதலான வில்வித்தை தெரிந்தவர்கள் கிருபாச்சாரியாரிடம் சென்றார்கள்.

'இன்று எதை குறிபார்த்து வீழ்த்த வேண்டும்?' பயிற்சி யாளர்கள் ஆவல் தொனிக்க கேட்டார்கள். வானத்தைப் பார்த்தார் கிருபாச்சாரியார். புறாக் கூட்டம் பறந்து சென்றது.

பறக்கும் புறாக்களில் மையத்தில் உள்ளதை வீழ்த்துங்கள் பார்க்கலாம் என்றார். பறக்கும் போது எப்படிக் குறி பார்ப்பது? சீடர்கள் ஒதுங்க அர்ச்சுனன் குறி பார்த்தான். நடுப்புறா வீழ்ந்தது. சபாஷ் என்று தட்டிக் கொடுத்தார் குருநாதர்.

அடுத்த நாள் காலை, புறாக் கூட்டம் பறந்து கொண்டிருந்தது. அவைகளின் பயணப் பாதையில் முதலில் செல்லும் புறாவை வீழ்த்து - கட்டளை இட்டார் குருநாதர்.

"மன்னிக்கவும், நான் தோற்கவே விரும்புகிறேன்" என்றான் கர்ணன். வில் வித்தையில் தேர்ந்தவன். ஏன் மறுக்கிறான்? குருவுக்குப் புரியவில்லை. "தோல்வி பயமா? உனக்கா?" என்றார்.

"மன்னிக்க வேண்டும் குருவே. அதிகாலை புறாக்கள் பறக்கின்றன. அவை வாயில் இரையைக் கவ்விக் கொண்டு

பறப்பதும் தெரிகிறது. கூட்டில் இருக்கும் குஞ்சுகளுக்கான இரையுடன் பறக்கும் புறாவைக் குறி பார்ப்பது எனது மனதுக்கு ஒவ்வாதது. புறாவைக் கொல்வது, உயிர் இழக்க வைப்பது என்பது வேறு. தன் குஞ்சுக்கு இரை கொண்டு செல்லும் தாய்ப் புறாவைக் கொல்வது என்பது வேறு. அதனால் இங்கே நான் தோற்கவே விரும்புகிறேன்" என்றான்.

வீரமும் தோற்கவில்லை. கர்ணனின் இறை அச்சமும் தோற்கவில்லை என்பதை இதில் இருந்து உணர முடிகிறது.

புராணங்களில் நீதி புகட்டப்படுகிறது. புரிந்து கொள்பவர்கள் ஜெயித்தவர்கள்.



5

புத்தம் சரணம்

நேபாள திரைப்படம் சம்ஸாரா.

பிரதிபலிப்பு - உண்மையின் கருத்துக்கணிப்பு.

நடந்ததா என்பது தெரியாது. எது?

சித்தார்த்தன் ஆசை தான் துயரத்திற்குக் காரணம் என சிந்திக்கிறான். விளைவு?

அரசபோகம் துறக்கிறான். மனைவி யசோதராவைப் பிரிகிறான். எப்போது? இரவில். அவள் தூங்கும்போது.

சொல்லிக் கொள்ளாமல் புறப்படுகிறான். ஆனால் பக்கத்தில் தூங்கும் மகன் ராகுலனுக்கு முத்தம் தந்து புறப்படு கிறான். அது என்ன பந்தம்? அப்பொழுது யசோதரா விழித்து, வழிமறித்து கேட்பதாக ஒரு புனை காட்சி. உண்மையாக அது இருந்தால் நிச்சயமான சத்தியம்!

"நீ எப்படி உலகின் ஆசைகளை துறந்து துறவி ஆகப் போகிறாய்? ஒருவேளை நான் இப்படி இரவில் இரகசியமாக வெளியேறத் துணிந்தால் நீ அதை எப்படி ஏற்றுக்கொள்வாய்? உலகம் எப்படிப் பேசும்?


நிச்சயம் தூங்கும் பொழுது குழந்தையை விட்டுச் செல்ல என்னால் முடியாது. காரணம் நான் ஒரு பெண் என்பதற்குமேல் நான் ஒரு தாய்"

- சவுக்கடி.

புத்த மதத்தவர் என்ன நினைப்பார்கள்?

6

உலகம் சுற்றலாம் வாங்க



❖ PASS கடப்பது; PORT கரை;
கரையைக் கடக்க உதவுவது PASSPORT!
கடவுச்சீட்டு என்பதைக் காட்டிலும் -
PASSPORT என்பது புரிகிறதே!

❖ நம் நாட்டைக் கடக்க PASSPORT. அடுத்த நாட்டுக்குள் நுழைய அனுமதி விசா. சில நாடுகளுக்கு இங்கே விசா கிடைக்கும். சில நாடுகளுக்கு அங்கே போனபின்தான் கிடைக்கும்.

❖ பாஸ் போர்ட், விசா நகல்கள் உறவுகளிடம் கொடுங்கள். பயண விபரமும்! சமயத்தில் உதவும்.

❖ மது, புகை ஒழிக்க வேண்டும். ஆனால் எல்லா விமான நிலையங்களிலும் Duty Free Shop - ல் இவை தான் மலிவு.

❖ பயணத் திட்டம் முன்கூட்டியே தெளிவாக (டிக்கெட், பணம், உடமை, செலவிடும் நேரம், பார்க்க வேண்டிய இடங்கள், பணிகள்) திட்டமிடுவது அவசியம்.

❖ பயணம் செய்யும் போது டாலர் கரன்ஸியைவிட டிராவல் செக்குகள் நல்லது.

- விமானடிக்கெட்டுக்கு ஆம்னிபஸ் டிக்கெட் மாதிரி, சமயத்துக்கு ஏற்ப விலை மாறும். உயரும், குறையும். நாம் பேரமும் பேசலாம்.
- INTERNATIONAL DRIVING LICENCE இருந்தால் வெளி நாடுகளில் வாடகைக் கார் எடுப்பதைவிட 'RENT A CAR' எடுப்பது எளிது, மலிவு, வசதி. ஒவ்வொரு நாட்டிலும் டிரைவிங் ஸீட் ஒவ்வொரு மாதிரி - சில நாட்டில் வலப்பக்கம், சில நாட்டில் இடப்பக்கம்.
- ஒவ்வொரு நாட்டின் நாணய மதிப்பும் வித்தியாசப்படும். பொருள் வாங்கும்போது கவனம் தேவை.
- சுற்றுலாப் பயணிகள், ஆன்மிகப் பயணம் என்றால் பார்க்க வேண்டிய இடங்கள், செலவழிக்க வேண்டிய நேரம், பணம், தூரம் எல்லாம் முதலில் எழுதிக் கொள்ளுங்கள்.
- வியாபாரி என்றால் தெரிந்தே இருக்கும். இருந்தாலும் சீதோஷ்ண நிலை மாற்றங்கள் எப்படி என்பதை தெரிந்து கொள்வது முக்கியம்.
- நாட்டுக்கு நாடு நேரமும் வித்தியாசப்படும். பூமத்திய ரேகை மையம். வித்தியாச நேரம் தெரிந்து கணக்குச் செய்வது முக்கியம். தூங்கும் நேரமும் மாறுபடும். கவனம்.
- உங்கள் உறவினர்க்கு நீங்கள் செல்லும் நாட்டின் / நகரத்தின் தொலைபேசித் தொடர்பு எண்ணை முன் எண்களுடன் கொடுக்கத் தவறாதீர்கள். நீங்கள் நெட்டில் தொடர்பு கொண்டாலும் உங்களை அவர்கள் அவசரத் தொடர்பு கொள்ள இது அவசியம்.

7

'இலங்கை'

- இலங்கை பயணம் செய்ய பயணம் - ஏற்ற மாதங்கள் ஜனவரியில் இருந்து மார்ச்சு மற்றும் சூலை முதல் செப்டம்பர் வரை
- பார்க்க வேண்டியவை. டம்புல்லா குகைக்கோவில். இதுதான் புத்தரின் பொற்கோயில்.
- கண்டி - 14ஆம் நுற்றாண்டு புத்தரின் பல் உள்ள கோயில் (டலடா மலிகவா) - தங்கப் பேழையில் பல நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்படுகிறது. ஜூலை / ஆகஸ்டு புத்தர்விழா.
- இந்த புத்தரை எந்த கோணத்தில் இருந்து பார்த்தாலும் நம்மைப் பார்ப்பார். பிள்ளையார்பட்டி வண்ண ஓவியம் ஓவியப்பிள்ளையார் போல.
- இராசராஜ சோழன் மகன் ராஜேந்திர சோழன் (1018 - 1030) கட்டிய ஆலயம், கண்டி முருகன் கோயில். சிகப்பு ஆடை சிறப்பு.
- கண்டி - கொழும்பு யானை கோசாலை - யானைகள் சரணாலயம்
- மாத்தளை முத்துமாரியம்மன் கோவில், முத்துவிநாயகர் கோயில்